# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஒன்பதாம் பத்து

## ஆறாம் திருமொழி - அக்கும்
## திருக்குறுங்குடி 2

** அக்கும் புலியின் * அதளும் உடையார் * அவர் ஒருவர்
பக்கம் நிற்க நின்ற * பண்பர் ஊர் போலும் **
தக்க மரத்தின் * தாழ் சினை ஏறி * தாய் வாயில்
கொக்கின் பிள்ளை * வெள்ளிறவுண்ணும் குறுங்குடியே 1

துங்கார் அரவத் * திரை வந்துலவத் * தொடுகடலுள்
பொங்கார் அரவில் துயிலும் * புனிதர் ஊர் போலும் **
செங்கால் அன்னம் * திகழ் தண்பணையில் பெடையோடும் *
கொங்கார் கமலத்து * அலரில் சேரும் குறுங்குடியே 2

வாழக் கண்டோம் * வந்து காண்மின் தொண்டீர்காள்! *
கேழல் செங்கண் * மாமுகில் வண்ணர் மருவும் ஊர் **
ஏழைச் செங்கால் * இன் துணை நாரைக்கு இரை தேடி *
கூழைப் பார்வைக் * கார் வயல் மேயும் குறுங்குடியே 3

சிர முன் ஐந்தும் ஐந்தும் * சிந்தச் சென்று * அரக்கன்
உரமும் கரமும் துணித்த * உரவோன் ஊர் போலும் **
இரவும் பகலும் * ஈன் தேன் முரல * மன்றெல்லாம்
குரவின் பூவே தான் * மண நாறும் குறுங்குடியே 4

கவ்வைக் களிற்று மன்னர் மாளக் * கலி மான் தேர்
ஐவர்க்காய் * அன்று அமரில் உய்த்தான் ஊர் போலும் **
மை வைத்து இலங்கு * கண்ணார் தங்கள் மொழி ஒப்பான் *
கொவ்வைக் கனி வாய்க் * கிள்ளை பேசும் குறுங்குடியே 5

தீ நீர் வண்ண * மாமலர் கொண்டு விரை ஏந்தி *
தூ நீர் பரவித் * தொழுமின் எழுமின் தொண்டீர்காள்! **
மா நீர் வண்ணர் * மருவி உறையும் இடம் * வானில்
கூன் நீர் மதியை * மாடம் தீண்டும் குறுங்குடியே 6

வல்லிச் சிறு நுண் இடையார் இடை * நீர் வைக்கின்ற *
அல்லல் சிந்தை தவிர * அடைமின் அடியீர்காள்! **
சொல்லில் திருவே அனையார் * கனி வாய் எயிறொப்பான் *
கொல்லை முல்லை * மெல்லரும்பு ஈனும் குறுங்குடியே 7

நாரார் இண்டை * நாண்மலர் கொண்டு நந்தமர்காள்! *
ஆரா அன்போடு * எம்பெருமான் ஊர் அடைமின்கள் **
தாரா ஆரும் * வார் புனல் மேய்ந்து வயல் வாழும் *
கூர் வாய் நாரை * பேடையொடு ஆடும் குறுங்குடியே 8

நின்ற வினையும் துயரும் கெட * மாமலர் ஏந்தி *
சென்று பணிமின் எழுமின் * தொழுமின் தொண்டீர்காள்! **
என்றும் இரவும் பகலும் * வரிவண்டு இசை பாட *
குன்றின் முல்லை * மன்றிடை நாறும் குறுங்குடியே 9

** சிலையால் இலங்கை செற்றான் * மற்றோர் சின வேழம் *
கொலையார் கொம்பு கொண்டான் * மேய குறுங்குடி மேல் **
கலையார் பனுவல் வல்லான் * கலியன் ஒலி மாலை *
நிலையார் பாடல் பாடப் * பாவம் நில்லாவே 10

**அடிவரவு:** அக்கு துங்கார் வாழ் சிரமுன் கவ்வை தீநீர் வல்லி நாரார் நின்ற சிலையால் தந்தை

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---